# தமிழ்மொழியும் இலக்கியமும்

**செயலட்டை 18 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 11**

## தமிழர் பண்பாடு

1. தமிழ்ப் பண்பாடு எனும் கட்டுரையின் ஆசிரியர் யார்?

2. யாதும் ஊரே யாவரும் கேளிர்..
   அ. இவ்வடிகள் இடம்பெறும் நூல் ?
   ஆ. கேளிர் என்பதன் கருத்து?
   இ.இப்பாடல் கூறும் கருத்து யாது?

3. தொல்காப்பியர் கூறும் பண்பாட்டுத் துறைகள் யாவை?

4. **தெய்வம் உணவே மாமரம் புட்பறை**
   **செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ..**
   அ. இவ்வடிகள் இடம்பெறும் பகுதி யாது ?
   ஆ. கருப் பொருள்கள் என குறிப்பிடப்படுபவை?

5. சீவக சிந்தாமணிக்கு உரை எழுதியவர் யார்?

6. **தமிழ் பக்தியின் மொழி என்று நான் அடிக்கடி கூறி வருகின்றேன்.**
   அ. இக் கூற்றினை கூறியவர் யார்?
   ஆ. பக்தியின் மொழி யாது ?

7. **யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல அன்பால்**
   **அன்பும் அருளும் அறனும் மூன்றும்..**
   அ. இவ்வடிகள் இடம்பெறும் நூல் யாது?
   ஆ.தாம் விருப்புபவை எவையென ஆசிரியர் கூறுகின்றார்?

8. **உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது..**
   அ. மேற்படி கூற்றைக் கூறியவர் யார்?
   ஆ.இங்கு புலப்படும் அணி யாது?

9. "**வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் பெற்ற தமிழ் நாடு.**". எனும் கூற்றினைக் கூறியவர் யார்?

10. **நான் மனிதன் மனிதனுக்கு இயல்பான எதனையும்நான் வெறுப்பதில்லை..**
    அ. இவ்வாறு கூறியவர் யார்?
    ஆ. இவ்வடிகளில் புலப்படும் பண்பு யாது?

11. **அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்**
    **தமியர் உண்டலும் இலரே..**
    அ. இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?
    ஆ. தமியர் என்பதன் கருத்து யாது?

12. **இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்**
    **அறவிலை வணிகனாயலன்..**
    அ. இம்மை, மறுமை என்பவை குறிப்பவை?
    ஆ.இப்பாடலடி இடம் பெறும் நூல் யாது?

13. **உலகம் போற்றும் ஆடவல்லாரின் வடிவம் இப்பக்தியின் பயனென்பதை யார் மறுப்பார்..**

அ. இக் கூற்று யாரால் கூறப்பட்டது?

ஆ. ஆடவல்லார் எனப்படுபவர் யார்?

14. **தொல்காப்பியர் கருப்பொருளில் பண்பாட்டுத்துறைகள் சிலவற்றை கூறுகின்றார்.**

அ. கருப்பொருள் என்றால் என்ன?

ஆ. கருப்பொருள் பற்றி கூறும் இலக்கண நூல் யாது?

15. தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படைக் குறிக்கோள்கள் எவை?

16. தமிழர் பண்பாட்டின் சிறப்பியல்புகள் எவையென கட்டுரையில் புலப்படுகின்றன?

17. தமிழ்ப் பண்பாட்டின் வளர்ச்சி பற்றி கருத்துரைக்குக.

18. தமிழ் பக்தியின் மொழி என்பதை கட்டுரையாசிரியர் காட்டும் தன்மையினை புலப்படுத்துக?